## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.226/2025 | Date | : 17.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : தமிழரசன் | Calling | : |
| Father Name | : ஈஸ்வரன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.02.2026.

(எதிரி ஆஜர்).

(**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், காவேரி நகரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 06-03-2025 ம் தேதி, காலை சுமார் 08.00 மணியளவில் எனது அண்ணன் பெரியசாமியும், அவரது மனைவி மரியா ஆக்னஸ், என்பவரும், அவர்களது குழந்தை திவ்யஸ்ரீ-யும் ஒரு இருசக்கர வாகனத்திலும், நானும், எனது நண்பர் சந்திரசேகரனும் ஒரு இருசக்கர வாகனத்திலும், பாலாஜி மற்றொரு இருசக்கர வாகனத்திலும் எடப்பாடி to ஜலகண்டாபுரம் சாலையில் உள்ள எங்களது குலதெய்வக்கோவிலுக்கு செல்வதற்காக பழக்காரன்காடு, காந்தி நகர் அருகே சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது, எங்களது அண்ணன் முன்னால் சென்றுகொண்டிருந்தார். எதிர் திசையில் வந்த இருசக்கர வாகனம் ஒன்று குறுக்கே வந்து எனது அண்ணனின் வலது காலின் மீது மோதிவிட்டது. எனது அண்ணியும்,

குழந்தையும்கீழே விழுந்துவிட்டார்கள். எனது அண்ணன் இருசக்கர வாகனத்துடன் சிறிது தூரம் இழுத்து செல்லப்பட்டார். எனது அண்ணனுக்கு காலில் அடிப்பட்டது. எனது அண்ணிக்கும், குழந்தைக்கும் அடிபடிவில்லை. பின்னர், அடிப்பட்ட எனது அண்ணனை எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது அண்ணன் சாலையின் இடதுபுறமாக தான் சென்றுகொண்டிருந்தார். எதிரே வந்த வாகனம் வலதுபுறமாக இருந்து குறுக்கே வந்தது தான் இந்த விபத்திற்கு காரணம். ஆஜர் எதிரி தான் அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1) நாங்கள் வீட்டில் இருந்து கிளம்புயபோது எத்தனைபேர் கிளம்புனோம் என்றால் 04 நபர்கள் கிளம்பினோம். Honda Splendor நானும், எனது நண்பர் சந்திரசேகரனும் சென்றோம். மற்றொரு இருசக்கர வாகனத்தில் பாலாஜியும், முனிராஜ், என்பவரும் சென்றார்கள். நான் சென்ற இருசக்கர வாகனத்தை யார் ஓட்டியது என்றால் எனது நண்பர் சந்திரசேகரன் ஓட்டிசென்றார். எத்தனை மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டோம் என்றால் காலை சுமார் 07.30 மணிக்கு புறப்பட்டோம்.

2) சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காலை சுமார் 08.00 மணி இருக்கும். எனது அண்ணனின் குழந்தையை எங்கு வைத்து கொண்டு சென்றார் என்றால் எனது அண்ணி மடியில் வைத்து கொண்டு சென்றார். எங்களுக்கும், எனது அண்ணன் சென்ற இருசக்கர வாகனத்திற்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும். எதிரே வந்த வாகனம்

என்ன வாகனம் என்றால் Hero Honda Splendor இருசக்கர வாகனம், பதிவு எண் தெரியாது. சம்பவத்திற்கு பின்னிட்டு அந்த இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தர்கள் என்றால் சுமார் 15 நபர்கள் இருந்தார்கள்.

3) நான் சென்று பார்த்தபிறகு தான் அடிப்பட்டது எனது அண்ணன் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் எனது அண்ணனை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் ஆமபுலன்ஸ் மூலம் அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், எனது அண்ணன் தான் விபத்திற்கு காரணம் என்றும், எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Tamilarasan

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.226/2025 | Date | : 17.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : |
| Name | : சந்திரசேகரன் | Calling | : |
| Father Name | : வெங்கடேசன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.02.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

<u>(**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், முருங்கைகாட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 06-03-2025 ம் தேதி, காலை சுமார் 08.00 – 08.30 மணியளவில் எனது நண்பர் பெரியசாமி, எடப்பாடி அருகே உள்ள அவரது குலதெய்வ கோவிலுக்கு அழைத்திருந்தார். பெரியசாமியும், அவரது மனைவி மரியா ஆக்னஸ், என்பவரும், அவர்களது குழந்தையும் பல்சர் இருசக்கர வாகனத்திலும், நானும், பெரியசாமியின் தம்பி தமிழரசனும் ஒரு இருசக்கர வாகனத்திலும், பழக்காரன்காடு, காந்தி நகர் அருகே சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது, பெரியசாமி எங்களுக்கு முன்னால் சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தார். எதிர் திசையில் வந்த Splendor இருசக்கர வாகனம் ஒன்று குறுக்கே வந்து பெரியசாமியின் வலது காலின் மீது மோதிவிட்டது. மோதியவுடன் இரண்டு இருசக்கர வாகனங்களும் கீழே விழுந்துவிட்டது.

பெரியசாமியின் மனைவிக்கும், குழந்தைக்கும் அடிபடிவில்லை, பெரியசாமிக்கு மட்டும் அடிப்பட்டது. பின்னர், அடிப்பட்ட பெரியசாமியை எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எதிரே வந்த வாகனம் வலதுபுறமாக இருந்து குறுக்கே வந்தது தான் இந்த விபத்திற்கு காரணம். ஆஜர் எதிரி தான் அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1) பெரியசாமி எங்கு வேலை செய்து வருகிறார் என்றால் தூத்துகுடியில் வேலை செய்கிறார், என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தன்று யார் யார் கோவிலுக்கு சென்றோம் என்றால் பெரியசாமியும், அவரது மனைவி, குழந்தையும் ஒரு இருசக்கர வாகனத்திலும், நானும், தமிழரசனும் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். இருவரும் 10 நிமிட இடைவெளியில் சென்றிருப்போமா என்றால் இல்லை, 05 நிமிட இடைவெளியில் சென்றிருப்போம்.

2) நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது சுமார் 10 நபர்கள் அங்கிருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின்னிட்டு, என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Sd/-Chandirasekaran

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.